மேற்கு வங்கம்: மேலும் ஓர் வாக்குச்சாவடி அலுவலர் உயிரிழப்பு

கொல்கத்தா, நவ.22: மேற்கு வங்க மாநிலத்தில் மேலும் ஓர் வாக்குச் சாவடி நிலைய அலுவலர் (பிஎல்ஓ) சனிக்கிழமை உயிரிழந்தார்.

ஏற்கெனவே மாநிலத்தின் ஜல்பைகுரி மாவட்டத்தில் ஓர் வாக்குச் சாவடி நிலைய அலவுலுர்கள் தற்கொலை செய்து கொண்டார். அதற்கு, வாக்காளர் அடையாள அட்டை தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) வேலைப் பளு காரணம் என புகார் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், நாடியா மாவட்டம் கிருஷ்ணாநகர் சோப்ரா பங்கல்ஜி பகுதியைச் சேர்ந்த ரிங்கு டரஃப்தார் (52) என்ற வாக்குச் சாவடி நிலைய அலுவலர் வீட்டுல் அவரின் அறையில் தூக்கிட்டு இறந்த நிலையில் சனிக்கிழமை காலை கண்டெடுக்கப்பட்டார்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், 'எஸ்ஐஆர் பணி வேலைப் பளு காரணமாகவே ரிங்கு உயிரிழந்ததாக அவரின் குடும்பத்தினர் புகார் தெரிவித்தனர். இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது' என்றார்.

மாநில அமைச்சர் உஜ்ஜல் பிஸ்வாஸ் உயிரிழந்தவரின் வீட்டுக்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்.

இதுகுறித்து மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'மாநிலத்தில் மேலும் பிஎல்ஓ உயிரிழந்ததாக கிடைத்தத் தகவல் அதிர்ச்சி அளிக்கிறது. எஸ்ஐஆர் பணிக்காக இன்னும் எத்தனை பேர் உயிரிழக்க வேண்டும்? இது மிகவம் தீவிரமான விஷயமாக மாறியுள்ளது' என்று குறிப்பிட்டார்.

'மாநிலத்தில் உரிய முறையில் திட்டமிடப்படாமல் மேற் கொள்ளப்படும் எஸ்ஐஆர் பணியால் பொதுமக்களும், அலுவலர்களும் பெரும் சிரமத்தைச் சந்தித்து வருகின்றனர். பிஎல் ஓ-க்கள் தற்கொலைகளும் தொடர்கின்றன. எனவே, எஸ்ஐ ஆர் பணியை நிறுத்த வேண்டும்' என்று மம்தா பானர்ஜி தலைமைத் தேர்தல் ஆணையருக்கு வியாழக்கிழமை கடிதம் எழுந்தியிருந்தார். இந்த நிலையில், பெண் பிஎல்ஓ தற்கொலை செய்து கொண்டார்.

முன்னதாக, ஜல்பைகுரி மாவட்டத்தில் பிஎல்ஓ ஒருவர் புதன்கிழமை தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். இதற்கு எஸ்ஐஆர் வேலைப் பளு காரணம் என அவரின் குடும்பத்தினர் புகார் தெரிவித்தனர்.

மத்திய பிரதேசத்தில் இருவர் உயிரிழப்பு: மத்திய பிரதேச மாநிலத்திலும் 2 பிஎல்ஓக்கள் உயிரிழந்தனர். பிஎல்ஓ-ஆக பணியாற்றி வந்த ரெய்சன் மாவட்டம் சத்லாபூர் பகுதியைச் சேர்ந்த ஆசிரியரான ராமகாந்த் பாண்டே, உடல்நலக் குறைவு காரணமாக வெள்ளிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

அதுபோல, தமோ மாவட்டத்தைச் சேர்ந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியரான நாராயண் தாஸ் சோனி என்பவரும் உயிரிழந்தார்.

இவர்கள் இருவரும் எஸ்ஐஆர் வேலைப் பளு காரணமாக உடல் நலன் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாக அவர்களின் குடும்பத்தினர் புகார் தெரிவித்தனர்.

சம்ஸ்கிருதம் குறித்து உதயநிதி விமர்சனம்: ஹிந்துக்களை அவமதிப்பதாக பாஜக கண்டனம்

புது தில்லி, நவ. 22: சம்ஸ்கிருதத்தை 'செத்துப் போன மொழி' என்று தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்ததைக் கண்டித்த பாஜக, 'மீண்டும் மீண்டும் ஹிந்துக்களை அவமதித்து, அவர் அராஜகத்தின் அடையாளமாக மாறிவிட்டார்' என்று சாடியுள்ளது.

சென்னையில் வெள்ளிக்கிழமை நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய உதயநிதி ஸ்டாலின், 'கடந்த 10 ஆண்டுகளில் தமிழ் வளர்ச்சிக்காக மத்திய அரசு ரூ.150 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளது. ஆனால், செத்துப்போன மொழியான சம்ஸ்கிருதத்துக்கு ரூ.2,400 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது' என்று குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் கௌரவ் பாட்டியா, 'உதயநிதி ஸ்டாலின், ஹிந்துக்கள் மீது கொண்ட வெறுப்புக்காக அறியப்படுகிறார். முன்னதாக, ஹிந்துத்துவம் மற்றும் ஹிந்துக்களை டெங்கு, மலேரியாவுடன் ஒப்பிட்டு ஹிந்துக்களின் உணர்வுகளை அவர் புண்படுத்தினார்.

இப்போது சம்ஸ்கிருதத்தை செத்துப்போன மொழி என்று குறிப்பிட்டு, மீண்டும் ஒருமுறை ஹிந்துக்களையும் நமது கலாசாரத்தையும் அவமதித்து, இழிவுபடுத்தியுள்ளார். இந்தக் கருத்துகள் தரக்குறைவானவை மற்றும் அருவருப்பானவை.

பிரதமர் நரேந்திர மோடி தனது நேர்மறை அரசியல் மூலம் வளர்ச்சி மற்றும் ஒற்றுமையை முன்னெடுத்து, ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்கும் நிலையில், உதயநிதி ஸ்டாலின் அராஜகம் மற்றும் பிளவுவாதத்தின் சின்னமாகியுள்ளார்.

இத்தகைய அபத்தமான கருத்துகளைப் பேசியதற்காக திமுக தலைவர்களை உச்சநீதிமன்றம் ஏற்கெனவே கண்டித்தும், உதயநிதி ஸ்டாலின் தொடர்ந்து ஹிந்துக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் அருவருப்பான நகைச்சுவைகளை மீண்டும் மீண்டும் நிகழ்த்தி வருகிறார்.

சம்ஸ்கிருதம் நமது கலாசாரம் மற்றும் மத நூல்களின் அடித்தளம் என்பதையும், கோடிக்கணக்கான ஹிந்துக்களின் நம்பிக்கை என்பதையும் உதயநிதி ஸ்டாலின் மறந்துவிட்டார்' என்றார்.

நிலுவையில் உள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை

புது தில்லி, நவ.22: நாடு முழுவதிலும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள 5 கோடிக்கும் அதிகமான வழக்குகளுக்குத் தீர்வு காண்பதிலும் மத்தியஸ்தத்தை விரைவுபடுத்துவதிலும் முன்னுரிமை அளிக்க உள்ளதாக உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்க உள்ள நீதிபதி சூர்ய காந்த் சனிக்கிழமை தெரிவித்தார்.

உச்சநீதிமன்றத்தின் 52-ஆவது தலைமை நீதிபதியான பி.ஆர்.கவாய் ஞாயிற்றுக்கிழமை (நவ.23) ஓய்வு பெறுகிறார்.

இதையடுத்து, புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி சூர்ய காந்த் பதவியேற்க உள்ளார். இதையொட்டி, உச்சநீதிமன்ற வழக்குகள் தொடர்பான செய்திகளை சேகரிக்கும் நிருபர்களுடன் நீதிபதி சூர்யகாந்த் தில்லியில் உள்ள அவரது இல்லத்தில் சனிக்கிழமை கலந்துரையாடினார்.

அப்போது அவர் கூறியதாவது: நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்து வைப்பதில் கவனம் செலுத்துவேன். உச்சநீதிமன்றத்தில் தற்போது நிலுவை வழக்குகளின் எண்ணிக்கை 90,000-ஐ கடந்துள்ளது. வழக்குகளைக் குறைப்பதற்கு முன்னுரிமை அளிப்பேன். உயர்நீதிமன்றங்கள் மற்றும் கீழமை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளைக் குறைக்க முயற்சிப்பேன். இது தொடர்பாக அறிக்கை கேட்பேன்.

இரண்டாவதாக மத்தியஸ்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் நாங்கள் ஒரு முழுமையான மற்றும் விரிவான பார்வையுடன் வழக்குரைஞர்களுடன் கலந்து பேசுவோம் என்றார் நீதிபதி சூர்ய காந்த்.

அறிக்கைகளின்படி நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் 4.6 கோடிக்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளது.

நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகள் சமூகவலைதளத்தில் விமர்சிக்கப்படுவது குறித்த கேள்விக்கு பதிலளித்த நீதிபதி சூர்ய காந்த், 'உச்சநீதிமன்ற நீதிபதி அல்லது தலைமை நீதிபதி பதவிக்கு வரும் நபர் சமூகவலைதள பதிவுகள் குறித்து கவலைபடக் கூடாது. உண்மையில், சமூகவலைதளத்தை 'சமூகதன்மையற்ற வலைதளம்' என்று அழைப்பேன். அதில் பதிவிடும் கருத்துகள் குறித்து கவலை கொள்வதில்லை. நியாயமான விமர்சனங்களை வரவேற்கிறேன்' என்றார்.

நீதிபதி சூர்ய காந்த் உச்சநீதிமன்றத்தின் 53-வது தலைமை நீதிபதியாக திங்கள்கிழமை (நவ.24) பதவியேற்கவிருக்கிறார். 2027-ஆம் ஆண்டு பிப்.9-இல் அவர் ஓய்வு பெறுகிறார்.

நீதிபதி சூர்யகாந்த்

இது எளிமையான வழி; பெரும்மாற்றத்தை ஏற்படுத்தும்.

தமிழ் வழக்காடு மொழியாகுமா?: 'தினமணி' கேள்வி

இந்தக் கலந்துரையாடலில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும் என நீண்ட கால கோரிக்கை குறித்து நீதிபதி சூர்யகாந்திடம் 'தினமணி' நிருபர் கேள்வி எழுப்பினார். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை மற்றும் உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழிகளை வழக்காடு மொழியாக அறிவிப்பது தொடர்பான 'தினமணி' நிருபரின் கேள்விக்கு, 'சிறிது காலம் பொறுத்திருங்கள்' என நீதிபதி சூர்ய காந்த் ஒற்றை வரியில் பதிலளித்தார்.

மகாராஷ்டிரம்: சிறுத்தையிடமிருந்து மாணவனைக் காப்பாற்றிய புத்தகப்பை

பால்கர், நவ. 22: மகாராஷ்டிர மாநிலம், பால்கர் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில், 11 வயதுப் பள்ளி மாணவனைச் சிறுத்தையின் தாக்குதலில் இருந்து அவரது புத்தகப்பை காப்பாற்றியுள்ளது.

சிறுவன் மயங்க் குவாரா தனது நண்பனின் உதவியுடன் கற்களை வீசியும், சத்தம் எழுப்பியும் சிறுத்தையை அங்கிருந்து விரட்டியுள்ளார் என்றும், மயங்க் குவாராவின் பள்ளிப்பையே அவருக்குப் பாதுகாப்புக் கேடயமாகச் செயல்பட்டது என்றும் அதிகாரிகள் சனிக்கிழமை வெளியிட்டுள்ள தகவலில் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை, 5-ஆம் வகுப்பு மாணவனான மயங்க் குவாரா பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாகச் சிறுத்தை ஒன்று தாக்கியுள்ளது. சிறுத்தையின் தாக்குதலைச் சற்றும் எதிர்பாராதபோதும், மயங்க் குவாராவும் அவரது நண்பனும் துணிச்சலுடன் சத்தம் எழுப்பியும், கற்களை வீசியும் பதிலுக்குப் போராடினர்.

சிறார்களின் கூச்சலும், துரிதகதியில் அவர்கள் செயல்பட்டதும் அருகில் இருந்தவர்களை உஷார்படுத்தியது. மக்கள் உடனடியாகச் சம்பவ இடத்துக்கு ஓடி வந்ததைக் கண்ட சிறுத்தை, மீண்டும் காட்டுக்குள் தப்பியோடியது. சிறுத்தையின் தாக்குதலால் மயங்க் குவாராவின் கையில் காயம் ஏற்பட்டது. சிறுத்தையின் தாக்குதலை மாணவரின் புத்தகப் பை தடுத்துவிட்டதால், அவர் உயிர் தப்பினார். காயமடைந்த மாணவர் அருகிலுள்ள விக்ரம்கட் கிராமப் புற மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுதொடர்பாக கான்சட் பகுதி உதவி வன அதிகாரி ஸ்வப்னில் மோஹிதே அளித்த பேட்டியில், 'சம்பவம் குறித்த தகவல் திந்து வனத்துறை அதிகாரிகள் உடனடியாகச் சம்பவ இடத்துக்கும், பின்னர் சிறுவன் சிகிச்சை பெறும் மருத்துவமனைக்கும் விரைந்தனர்.

இச்சம்பவத்தை வனத்துறை தீவிரமாக எடுத்துக்கொண்டுள்ள துடன், பல தடுப்பு நடவடிக்கைகளையும் செயல்படுத்தி வருகிறது.

சிறுத்தை நடமாட்டம் உள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகள் மாலை 4 மணிக்கெல்லாம் மூடப்பட வேண்டும் என்று வனத்துறை கேட்டுக்கொண்டுள்ளது. பாரம்பரிய முறைப்படி, பொது அறிவிப்புகள் மூலம் கிராம மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

கூடுதலாக, சிறுத்தையின் நடமாட்டத்தைக் கண்காணிக்க செயற்கை நுண்ணறிவு (ஏஐ) வசதிகொண்ட கேமராக்கள் பொருத்தப்பட்டு வருகின்றன' என்று தெரிவித்தார்.

SBI பாரத ஸ்டேட் வங்கி
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II

எண். 44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திருமதி. மீனாகுமாரி.P - கைபேசி 9790960729

தொடர்புக்கு : நகர வழக்கு அலுவலர் பெயர்: திரு. ஜித்தின் ஆன்டோ, மொபைல்: 9043563133

அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் **கீழ்குறிப்பிட்டுள்ள கவாதீனத்தில்** எடுத்துக்கொள்ளப்பட்டது. **சென்னை பாரத ஸ்டேட் வங்கி, SARB-II கிளைக்கு** கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு"** மற்றும் **"உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"என்ன உள்ளதோ அப்படியே"** எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

வ.எண்:1: கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி: 1) திரு. மோகன் கிருஷ்ணா உரத், த/பெ. திரு. இராஜேந்திரநாத் கோந்தாத், முகவரி-1: 9010 Sunni Perch CT, Perry Hall, MD 21128, Post Box 37007, USA. முகவரி-2: 707, YORK ROAD, Apt.7036, MD 21204-202, Townson, USA. முகவரி-3: Pine -901, L&T Eden Park- Pragnya, M. R. சாலை, சிறுசேரி, சென்னை- 603 103. முகவரி-4: M/s Rain Bird Health Care Business Services Pvt Ltd, எண்.2, விங்-A, முதல் தளம், ஒசோன் டெக்னோ பார்க், அம்கார்டன், நாவலூர், OMR, சென்னை-600130.2) திருமதி. அனிதா மோகன், க/பெ. திரு. மோகன் கிருஷ்ணா உரத், முகவரி-1: 502, Washing Ave Ste 200, Towson, MD 21204, Washington, USA. முகவரி-2: Pine -901, L&T Eden Park- Pragnya, M. R. சாலை, சிறுசேரி, சென்னை- 603103. முகவரி- 3: Villa no. 58, Type-B, Hebron Enclave, Halehalli Village, T.C.Palya Main Road, Bangalore-560016. முகவரி-4: Urath Villa no. 58, Type-B, Hebron Enclave, Halehalli Village, T.C. Palya Main Road, Bangalore- 560 016.

நிலுவைத் தொகை: 15.11.2025 அன்றுள்ளபடி ரூ.6,61,60,534.00 (ரூபாய் ஆறு கோடியே அறுபத்தோரு இலட்சத்து அறுபதாயிரத்து ஐநூற்று முப்பத்து நான்கு மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, இதர, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட.

அசையா சொத்தின் விளக்கம்

மூல ஆவணதாரர் பெயர் : திரு. மோகன் கிருஷ்ணா உரத் & திருமதி. அனிதா மோகன் : அட்டவணை "A" சொத்து (மொத்த சொத்தின் விளக்கம்) பெங்களூரு (அவலஹள்ளி கிராம ஊராட்சி நிர்வாக அதிகாரவரம்பிற்குட்பட்ட), பெங்களூரு கிழக்கு வட்டம், பிடாரஹள்ளிஹோப்ளி, ஹூலேஹள்ளி கிராமத்தின் சர்வே எண். 60,61,62 & 69 இல் அமைந்துள்ள மொத்தம் 11 ஏக்கர்கள் 15குண்டாஸ் (4,95,495 சதுர அடி) விஸ்தீரணமுள்ள குடியிருப்பு நிலங்களாக மாற்றப்பட்ட கதா எண்.91/60, 61,62 & 69 அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில்: சர்வே எண்.68 மற்றும் 33 இல் உள்ள நிலங்கள், தெற்கில்: சர்வே எண்.63 மற்றும் 77 இல் உள்ள நிலங்கள், மேற்கில்: சாலை; கிழக்கில்: சர்வே எண்.34 இல் உள்ள நிலங்கள். **அட்டவணை "B" சொத்து (வாங்கியவருக்கு இதன்மூலம் தெரியப்படுத்தப்பட்ட சொத்து)** அட்டவணை "A" சொத்தின் மனை எண்.58 இல் அங்கிய ஹெப்ராள் என்கிலேவ் திட்டத்தில் அமைந்துள்ள சுமார் 7,317 ச.அடி (6,300ச.அடி தனி நிலப் பரப்பளவு மற்றும் பொது பரப்பு 1,017ச.அடி.) சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **அட்டவணை "C" சொத்து (இதன்மூலம் தெரிவிக்கப்பட்ட குடியிருப்பு வில்லாவின் விளக்கம்)** அட்டவணை சொத்தில் கட்டப்பட்டுள்ள ஹெப்ராள் என்கிலேவ் திட்டத்தில் 5 படுக்கையறைகள் கொண்ட சுமார் 5,100 ச.அடி மூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட, டைப் B, குடியிருப்பு வில்லா எண்.58, அதனுடன் இதர வில்லாக்களின் உரிமையாளர்களுக்கும் சமமாக உள்ள கார் நிறுத்தும் உபயோக உரிமை, பாதைகள், தோட்டம், மற்றும் இதர பரப்புகளின் விகிதாச்சாரப்படி உள்ள பொதுப் பரப்பின் பங்கு. அதனைச் சார்ந்த அனைத்தும். **எல்லைகள்:** வடக்கில்: வாகனப் பாதை; தெற்கில்: வில்லா எண்.59, டைப் B2 & வில்லா எண்.69 டைப் B1; மேற்கில்: வாகனப் பாதை; கிழக்கில்: வாகனப் பாதை. **சொத்து ID: SBIN200033420148.**

கவாதீன நிலை: மெய்நிலை

குறைத்தப்ச கேப்பு விலை ₹ 5,70,00,000/- | டேவணித்தொகை ₹ 57,00,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 05.12.2025 ; நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

வ.எண்:2 கடன்தார் பெயர் மற்றும் முகவரி: திரு.B.S. சரவணன், த/பெ. திரு. கந்தரபபு, 8/1, மேடவாக்கம் குளச் சாலை, இராமலிங்கபுரம், அயனாவரம் சாலை அருகில், சென்னை -600012. மேலும் ஓர் முகவரி: C/o. Samy Iyappa Trading Company, A1, அண்ணா பிள்ளை தெரு, சேலகாபேட்டை, சென்னை -600079.

நிலுவைத் தொகை :14.11.2025 அன்றுள்ளபடி ரூ.43,66,363.00 (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து முன்னூற்று அறுபத்து மூன்று மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட.

அசையா சொத்தின் விளக்கம்

மூல ஆவணதாரரின் பெயர்:திரு.B.S.சரவணன். சொத்து எண்.1: காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருத்தணி சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சர்வே எண்.291/15, 291/16 மற்றும் 291/18 இல் அடங்கிய திருத்தணி கிராமத்தின் மொத்த சர்வே எண்கள்.291/4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 291/19, 292/3, 4, 5, 6, 7, 8, 9, 292/25, 293/1, 2 மற்றும் 293/3, "திருத்தணிகை நகர்" என பெயரிப்பட்ட மனைப்பிரிவு **மனை எண்.64** இன் விஸ்தீரணம் 1040ச.அடி நிலம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** கிழக்கில்: மனை எண்.65; மேற்கில்: மனை எண்.63; வடக்கில்: மனை எண்.55; தெற்கில்: 23 அடி அகல சாலை; **நாற்பாப்புகள்:** கிழக்கிலிருந்து மேற்காக வட புறம்: 26 அடி; கிழக்கிலிருந்து மேற்காக தென் புறம்: 26 அடி; வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு புறம்: 40 அடி. வடக்கிலிருந்து தெற்காக மேற்கு புறம்: 40 அடி. **Asset ID- SBIN200013569182.**

கவாதீன நிலை: மெய்நிலை

குறைத்தப்ச கேப்பு விலை ₹ 14,00,000/- | டேவணித்தொகை ₹ 1,40,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 25,000/-

சொத்து எண்.2 : காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருத்தணி சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், சர்வே எண்.291/15, 291/16 மற்றும் 291/18 இல் அடங்கிய திருத்தணி கிராமத்தின் மொத்த சர்வே எண்கள்.291/4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 291/19, 292/3, 4, 5, 6, 7, 8, 9, 292/25, 293/1, 2 மற்றும் 293/3, "திருத்தணிகை நகர்" என பெயரிப்பட்ட மனைப்பிரிவு **மனை எண்.68** இன் விஸ்தீரணம் 1040ச.அடி நிலம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** கிழக்கில்: மனை எண்.69; மேற்கில்: மனை எண்.67; வடக்கில்: மனை எண்.51; தெற்கில்: 23 அடி அகல சாலை; **நாற்பாப்புகள்:** கிழக்கிலிருந்து மேற்காக வட புறம்: 26 அடி; கிழக்கிலிருந்து மேற்காக தென் புறம்: 26 அடி; வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு புறம்: 40 அடி; வடக்கிலிருந்து தெற்காக மேற்கு புறம்: 40 அடி. **Asset ID- SBIN200015674856.**

கவாதீன நிலை: மெய்நிலை

குறைத்தப்ச கேப்பு விலை ₹ 14,00,000/- | டேவணித்தொகை ₹ 1,40,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 25,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 05.12.2025 ; நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

வ.எண்:3 கடன்தார் பெயர் மற்றும் முகவரி: திரு. பிரதீப் குமார் நவீன்.I. த/பெ. திரு. இனவரசு, முகவரி 1: ஃப்ளாட் F6. பிளாக் -A, முதல் தளம், துலிப் கார்டன், கிருஷ்ணா நகர்,2வது பிரதான சாலை, இராஜகீழ்ப்பாக்கம், செங்கல்பட்டு – 600 073. **மேலும் ஒரு முகவரி:** எண்.95, ஃப்ளாட் எண் F2, முதல் தளம், சரவணா ஹோம், TTK நகர், 4வது பிரதான சாலை, பீர்க்கன்கரணை, காஞ்சிபுரம் – 600063. **மேலும் ஒரு முகவரி:** ஃப்ளாட் எண்:G1, தரை தளம், மனை எண்:2, அருள் முருகன் நந்தவனம் நகர், குரோம்பேட்டை சாலை, நன்மங்கலம், சென்னை – 600 129. **அலுவலக முகவரி 1: Dorman Products India LLP**, Test Development Engineer, EMP No (34366)technest Cabin – 1 Software Technology Parks of India, எண்.5, இராஜீவ் காந்தி சாலை, தரமணி, சென்னை – 600 113. **அலுவலக முகவரி 2:** Dorman Products India LLP, Test Development Engineer, EMP No (34366) எண்: SFA, இரண்டாம் தளம், எண்.62, வேளச்சேரி பிரதான சாலை, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. **சொத்தின் முகவரி:** ஃப்ளாட் எண்:SB2, 2வது தளம், Sri Sai Square, மனை எண்.9, 10, பிளாக்-B, நந்தியரம், சென்னை – 603202.

நிலுவைத் தொகை:15.11.2025 அன்றுள்ளபடி ரூ.62,99,234.00 (ரூபாய் அறுபத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருநூற்று முப்பத்து நான்கு மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, இதர, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட.

அசையா சொத்தின் விளக்கம்

மூல ஆவணதாரர் பெயர்: திரு. பிரதீப் குமார் நவீன்.I, 03.09.2021 தேதியிட்ட கட்டுமான ஒப்பந்த எண். 7534/2021 மற்றும் 03.09.2021 தேதியிட்ட விற்பனை ஆவண எண். 7535/2021 இன் படி திரு. பிரதீப் குமார் நவீன்.I அவர்களின் பெயரில் உள்ள சொத்து. சொத்தின் அட்டவணை: அட்டவணை-A (மொத்தச் சொத்து) : தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் தற்போது வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நந்திவரம் கூடுவாஞ்சேரி ஊராட்சி எல்லைகளுக்குட்பட்ட நந்திவரம் கிராமத்தின் தணைப்பிரிவாக்கப்பட்ட பழைய சர்வே எண்.527/4B, பட்டா எண்.6765 இன்படி புதிய சர்வே எண்கள்.527/4B2 & 527/4B3 இல் அடங்கிய நகரத் திட்ட தணை இயக்குநர், அவர்களின் செயல்முறைநகளின்படி 05.01.2012 தேதியிட்ட LP/DTP எண்.3/2012 அங்கீகாரம்பெற்ற 'ஸ்ரீ சாய் ஸ்கொயர்' என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவு மனை எண்.9 இன் பரப்பளவு 2002½ ச.அடி மற்றும் மனை எண்.10 இன் பரப்பளவு 2040ச.அடி மொத்தமாக 4042½ சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **மனை எண்.9 இன் எல்லைகள்:** வடக்கில்: சர்வே எண்.527/4A இல் உள்ள திருமதி. இராதாபாய் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம், தெற்கில்: மனை எண்.10, கிழக்கில்: 20அடி அகல மனைப்பிரிவின் சாலை, மேற்கில்: சர்வே எண். 526/3P மற்றும் 526/3 'O' இல் உள்ள நிலம், நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் : 60 அடி, கிழக்கு மேற்காக தென் புறம் : 60 அடி, வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 33 ½ அடி, வடக்குத் தெற்காக கிழக்கு புறம் : 33 ¼ அடி, **மனை எண்.10 இன் எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.9, தெற்கில்: சர்வே எண்.527/11 இல் உள்ள நிலம், கிழக்கில்: 20அடி அகல மனைப்பிரிவின் சாலை, மேற்கில்: சர்வே எண்.526/3P மற்றும் 526/3 'O' இல் உள்ள நிலம், **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக வட புறம் : 60 அடி, கிழக்கு மேற்காக தென் புறம் : 60 அடி, வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 34 அடி, வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 34 அடி. **அட்டவணை "B":** அட்டவணை 'A' சொத்தில் விருப்பம், உரிமை மற்றும் பத்திரத்தின்படி பிரிக்கப்படாத பங்கு 395ச.அடி நிலம். **அட்டவணை "C":** வாகத்தில் மூடிய கார் நிறுத்தும் இடம், பொது வசதிகள் மற்றும் பொதுப் பரப்பு உட்பட இரண்டாம் தளத்தில் RCC மேற்தளங்கொண்ட 1195ச.அடி கட்டிடப் பரப்பு கொண்ட குடியிருப்பு ஃப்ளாட் எண்- SB2.

கவாதீன நிலை: மெய்நிலை

குறைத்தப்ச கேப்பு விலை ₹ 35,00,000/- | டேவணித்தொகை ₹ 3,50,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 06.12.2025 ; நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

வங்கிக்குத் தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட அனைத்து சொத்துக்களுக்கும் வில்லங்கங்கள் ஏதுமில்லை

மின் ஏலத் தேதி & நேரம்: வ.எண். 1 முதல் 3 வரை **16.12.2025** நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் விற்பனை முடியும் வரை தொடர்ந்து நடைபெறும்)

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.baanknet.com/

கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான www.bank.sbi என்ற இணைப்பில் காணலாம்.

தேதி: 17.11.2025, இடம்: சென்னை

அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB - II, சென்னை

டச்சு வங்கி AG

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ் அசையாச் சொத்தின் விற்பனை

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் ச